**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உத்தமபாளையம்.**

முன்னிலை – திரு.P. காமராசு, B.A., B.L.,

நீதித்துறை நடுவர்,

உத்தமபாளையம்.

**2026 ஏப்ரல்–02–ம் நாள் வியாழக்கிழமை**

2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி–19–ம் நாள்

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.74/2026**

**CNR.No.TNTH07-000291-2024**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசு சார்பாக – சார்பு ஆய்வாளர், கூடலூர் வடக்கு காவல் நிலையம், குற்ற எண்.322/2022. |
| // எதிர் // | | |
| எதிரி | – | ரமேஷ் (வயது 49/2023),<br>த/பெ.கழுவத்தேவர்,<br>மெயின்ரோடு, கே.எம்.பட்டி. |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 358 இதச–ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 358 இதச–ன் கீழ் |
| தீர்மானம் | – | முடிவாக, எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 358 இதச–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. |

இவ்வழக்கானது 08.01.2026–ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணையின் போது, குற்றம் முறையிடுபவர் தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர்

திருமதி.M.அழகுமாரிஸ்வரி,B.A.,B.L., அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2, உத்தமபாளையம் அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.K.பார்த்திபன்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சாட்சி, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**தீர்ப்புரை**

**இறுதியறிக்கையின் சுருக்கம்**

1) கடந்த 28.12.2022ம் தேதி 09.00 மணிக்கு சர்வே எண் 21/1Bல் உள்ள ஜெயக்குமார் என்பவருக்கு சொந்தமான விவசாய நிலத்தில் சாட்சிகள் ராஜா, மாயக்காள், பேயம்மாள், லட்சுமி மற்றும் சிலர் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது, அந்த வழியாக சென்ற எதிரி தோட்டத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்களிடம் பேசிக்கொண்டிருந்துள்ளார். அப்போது 1ம் சாட்சி தோட்டத்தில் நட்டு வைத்திருந்த தென்னங்கன்றுகளை பிடுங்கி போட்டுள்ளார். அதை பார்த்த ரமேஷ், 1ம் சாட்சியிடம் தென்னங்கன்றுகளை பிடுங்காதே என்று சத்தம் போட்டுள்ளார். 1ம் சாட்சியும், எதிரியிடம் தென்னங்கன்றுகளை பிடுங்குனா அடிப்பியா வந்து அடி பார்ப்போம் என்று சொல்லிக்கொண்டே தென்னங்கன்றுகளை பிடுங்கி போட்டுள்ளார். ஆத்திரமூட்டியதின் பேரில் எதிரி 1ம் சாட்சியை ஆபாசமாக பேசி கையால் அடித்து, கீழே தள்ளிவிட்ட எதிரியின் செயல் ச/பி 294(b), 323, 358 இதச–ன் கீழ் கூடலூர் வடக்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) மேற்படி இறுதியறிக்கையை பரிசீலனை செய்து, இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் குவிமுச 207–ன் படி இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிக்கு போதிய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு, மேலும் ச/பி 294(b), 323, 358 இதச–கீழ் குற்றச்சாட்டுகள் குவிமுச பிரிவு 240(1)–ன் படி வினவியபோது, எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்தார். எனவே வழக்கு விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது.

3) எதிரி மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிக்க, அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான

சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள், ஆவணங்கள் இல்லை.

**4) அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்று ஆவணங்களின் படி வழக்கு சுருக்கம்—**

4.1) எதிரி மீதான குற்றச்சாட்டுகளை பொறுத்து, அ.சா.1 முத்துப்பாண்டி, அ.சா.2 மணிமேகலை ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில், சுமார் 4 வருடத்திற்கு முன்பு தங்களது தென்னந்தோப்பு முன்பு கூட்டமாக இருந்தார்கள். என்ன சத்தம் என பார்ப்பதற்கு தாங்கள் சென்றபோது, அங்கே ஏற்பட்ட தள்ளுமுள்ளில் தாங்கள் கீழே விழுந்ததில் ஊமைக்காயம் ஏற்பட்டது. நடந்த சம்பவத்தைப் பற்றி காவல் நிலையத்தில் சொல்வதற்கு சென்றபோது, காவல் நிலையத்தில் அ.சா.1னிடம் கையொப்பம் வாங்கினார்கள். புகாரில் எழுதியுள்ள விபரம் தங்களுக்கு தெரியாது என்றும், போலிசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியளித்துள்ளார்கள்.

4.2) அ.சா.3 விஜயராமன் தனது சாட்சியத்தில், தான் தற்போது கூடலூர் வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் விசாரணை செய்து மற்றும் வழக்கின் மேல் விசாரணை செய்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் பாலசுப்பிரமணியம் அவர்கள் பணிமாறுதாலகி சென்றுவிட்டதாலும், அவரது கையொப்பம் தனக்கு பரீட்சியம் என்பதாலும், ஆவணங்களை பார்த்து தன்னால் சாட்சியம் அளிக்க இயலும். கடந்த 28.12.2022ம் தேதி 11.30 மணிக்கு சார்பு ஆய்வாளர் நிலையப் பொறுப்பிலிருந்தபோது, கம்பம் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று, அங்கு சென்று சிகிச்சையில் இருந்த வீரணன் மகன் முத்துபாண்டி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலம் பெற்று, புகாரின் தன்மைக்கேற்ப, எதிரிகள் மீது பிரிவுகள் 147, 148, 448, 294(பி), 324, 506(2) IPC & 4 of TNPWH Act கீழ் குற்ற எண் 322/2022 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். பின்னர் அன்றைய தினமே மாலை 15.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு சாட்சிகள் பாண்டியன், ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தார். பின்னர் சாட்சிகள் 1 முதல் 12 வரையிலானவர்கள் தனிதனியே விசாரணை

செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் முதற்கட்ட விசாரணையில் உண்மை என தெரியவந்ததால் எதிரியை 22.06.2023–ம் தேதி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தார். பின்னர் வழக்கில் காயம்பட்ட அ.சா.1, 2 க்கு சிகிச்சையளித்த மருத்துவர் லோகேஷ் மற்றும் கார்த்திக்கேயன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று காயச்சான்றுகள் பெற்றார். விசாரணை இறுதியில் எதிரி ரமேஷ் தவிர மற்ற எதிரிகள் குற்றச்செயலில் ஈடுபடவில்லை என தெரியவந்ததால், எதிரிகளை நீக்கம் செய்து நீக்கல் அறிக்கை மற்றும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தார். வழக்கு விசாரணை முடித்து சார்பு ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது 147, 148, 448, 294(பி), 324, 506(2)IPC & 4 of TNPWH Act கீழ் இருந்து 294(பி), 323, 358 இதசவாக மாறுதல் செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

5) அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்ட பிறகு, வழக்கில் எதிரிக்கு எதிராக உள்ள அரசு தரப்பு சாட்சியங்கள் குறித்து எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் கேள்வி கேட்டபோது, எதிரி அவை பொய் சாட்சிகள் என்றும், தனது தரப்பில் சாட்சி இல்லை என்றும் கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

<u>7) வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள்:–</u>

**(i) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?**

**(ii) அவ்வாறு நிரூபிக்கப்பட்டிருந்தால் எதிரிக்கு வழங்க கூடிய தண்டனை விபரம் என்ன?**

7.1) இவ்வழக்கில் எதிரி மீது குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா என பார்க்கும்பொழுது, வழக்கில் பாதிக்கப்பட்ட மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்த

சாட்சிகளான அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில், எதிரி அசிங்கமாக பேசி, அடித்து, காயம் ஏற்படுத்தியதாக சொல்லவில்லை, கீழே விழுந்து தங்களுக்கு ஊமைக்காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளார்கள். குறுக்கு விசாரணையில் எதிரிகளுடன் சமாதானமாகி விட்டதாக ஒப்புக்கொண்டுள்ளார்கள். இருவரும் சேர்ந்து தாக்கல் செய்துள்ள சமாதானம் மனு, வழக்கு சமாதானமாக கூடிய வழக்கு அல்ல என தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், புலன் விசாரணை அதிகாரி சாட்சிகளை விசாரணை செய்து, குற்ற அறிக்கையை தாக்கல் செய்தது பற்றி சாட்சியமளித்துள்ளார். அவருடைய சாட்சியம் மட்டுமே எதிரி குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளார் என்பதற்கு நிரூபணமாக அமையவில்லை. எனவே, எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் அடிப்படையில் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 358 இதச–ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருட்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

இத்தீர்ப்பானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின் இன்று 02.04.2026–ம் தேதி இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/திரு.P.காமராசு,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

(Statement Under rule 106 of Criminal Rules of Practice)

| | | |
|---|---|---|
| 1. | அரசு சார்பாக – காவல்நிலையம் குற்ற எண்: | அரசு சார்பாக – சார்பு ஆய்வாளர், கூடலூர் வடக்கு காவல் நிலையம், குற்ற எண்.322/2022. |
| | **Description of the accused** | |
| 2. | பெயர் | ரமேஷ் (வயது 49/2023),<br>த/பெ.கழுவத்தேவர்,<br>மெயின்ரோடு, கே.எம்.பட்டி. |
| 3. | கணவர்/ தகப்பனார் பெயர் | –– |
| 4. | தொழில் | –– |
| 5. | முகவரி | –– |
| 6. | வயது | –– |
| | **தேதிகள்** | |
| 7. | குற்ற நிகழ்வு | 28.12.2022 |
| 8. | புகார் நாள் | 28.12.2022 |
| 9. | கைது செய்யப்பட்ட நாள் | 22.06.2023 |
| 10. | பிணையில் வந்த நாள் | 22.06.2023 (காவல் நிலைய பிணை) |
| 11. | விசாரணை தொடங்கிய நாள் | 06.02.2026 |
| 13. | விசாரணை முடித்த நாள் | 01.04.2026 |
| 14. | தீர்ப்பு விபரம், நாள் | 02.04.2026 (குற்றவாளி இல்லை) |
| 15. | தீர்ப்பு நகல் | 02.04.2026 |
| 16. | காலதாமத்திற்கான விளக்கம் | ––– |

**வழக்கு சுருக்கம்**

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021– நாளிட்ட R.O.C.No.814/2020/RG/F1(P.Dis.No.36/2021)உத்தரவின் படி CASE SUMMARY கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.**

| **வ. எண்** | **விபரங்கள்** | **குறிப்புகள்** |
|---|---|---|
| 1. | குற்ற நிகழ்வு நாள்:<br>புகார் நாள்: | 28.12.2022<br>28.12.2022 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | குற்ற எண்:<br>காவல் நிலையம்: | அரசு சார்பாக – சார்பு ஆய்வாளர், கூடலூர் வடக்கு காவல் நிலையம், குற்ற எண்.322/2022. | | |
| 3. | குற்றச்சாட்டப்பட்டவரின் பெயர் மற்றும் அல்லது கூடுதல் குற்றச்சாட்டப்பட்டவரின் பெயர்கள் எதிரிகளின் பெயர், வயது, | ரமேஷ் (வயது 49/2023),<br>த/பெ.கழுவத்தேவர்,<br>மெயின்ரோடு, கே.எம்.பட்டி. | | |
| 4. | எதிரிகள் காவல் அடைப்பு நாள் | --- | | |
| 5. | எதிரிகள் பிணையில் வெளியே வந்த நாள்(Ordinary Bail, Anticipatory Bail) | --- | | |
| 6. | குற்ற இறுதியறிக்கை நாள் | 25.09.2023 | | |
| 7. | வழக்கு தாக்கல் செய்த நாள் | 16.11.2024 | | |
| 8. | குற்றச்சாட்டு வனைந்த நாள் | 06.02.2026 | | |
| 9. | இடைக்கால மனுக்கள் விபரம் (Warrant Recall) | --- | | |
| 10. | எதிரி தலைமறைவு விபரம் | --- | | |
| 11. | மேல் நீதிமன்ற தடை உத்தரவு ஏற்பட்டிருந்தால் அதன் விபரம் | --- | | |
| 12. | முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை விசாரித்த நாட்கள் | விசாரித்த நாட்கள் | | |
| | | அரசு தரப்பு சாட்சிகளின் எண்ணிக்கை | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1. | 27.03.2026 | 27.03.2026 |
| | | அ.சா.2. | 27.03.2026 | 27.03.2026 |
| | | அ.சா.3. | 27.03.2026 | 27.03.2026 |
| 13. | பிரிவு 313(1)(b) கேள்வி கேட்ட நாள் | 01.04.2026 | | |
| 14. | தாமத வழக்குகளின் விபரம்(Delay Reason) | --- | | |

## பிற்சேர்க்கை

**அரசு தரப்பு சாட்சிகள்–**

1. அ.சா.1 ... திரு.முத்துப்பாண்டி
2. அ.சா.2 ... திருமதி.மணிமேகலை
3. அ.சா.3 ... திரு.விஜயராமன் (சார்பு ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்–**

1. அ.சா.ஆ.1 – 28.12.2022 ம் தேதியிட்ட புகாரில் உள்ள கையொப்பம்
2. அ.சா.ஆ.2 – 28.12.2022 ம் தேதியிட்ட புகார்
3. அ.சா.ஆ.3 – 28.12.2022 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை
4. அ.சா.ஆ.4 – பார்வை மகஜர்
5. அ.சா.ஆ.5 – வரைபடம்
6. அ.சா.ஆ.6 – விபத்து பதிவேடுடன் கூடிய அ.சா.1 ன் காயச்சான்று
7. அ.சா.ஆ.7 – விபத்து பதிவேடுடன் கூடிய அ.சா.2 ன் காயச்சான்று
8. அ.சா.ஆ.8 – எதிரிகள் நீக்கல் அறிக்கை
9. அ.சா.ஆ.9 – சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**அரசு தரப்பு சான்று பொருள் –** இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்–** இல்லை.

ஒம்/திரு.P.காமராசு,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

**பின்குறிப்பு–**

1. எதிரி வழக்கு விசாரணையின் போது ஜாமினில் இருந்து வந்துள்ளார்.
2. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கில் சொத்துக்கள் இல்லை.
4. எந்த சாட்சிகளும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

// உண்மை நகல்//

KAMARASU P

Digitally signed by KAMARASU P
Date: 2026.04.02 20:21:59 +0530

நீதித்துறை நடுவர், உத்தமபாளையம்.